2022 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம் : 233

இல. 31, இசுரு மாவத்தை,
பெலவத்த, பத்தரமுல்லை.
www.analyst.gov.lk
govanalyst@sltnet.lk

தீபிகா சனவிரத்ன
அரசாங்க பகுப்பாய்வாளர்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தகவல்கள் 1

1.1 அறிமுகம் 1
1.2 திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் 2
1.3 பிரதான பணிகள் 3
1.4 திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு 4
1.5 நிறுவனத்தின் பிரதான பிரிவுகள் 5
1.6 வெளிநாட்டு நிதியைக் கொண்ட கருத்திட்டங்களின் விபரம் 8

அத்தியாயம் 02 – திணைக்களத்தின் செயலாற்றுகை 9

அத்தியாயம் 03 – 2022.12.31 ஆம் திகதிக்கு ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 22

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 22
3.2 நிதி நிலைமைக் கூற்று 24
3.3 காசோட்டக் கூற்று 25
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 26
3.5 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை 26
3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை 27
3.7 நி.பி. 208 இற்கமைய ஏற்பாடுகளை சாட்டுதல் செய்தல் 27
3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவது பற்றிய முன்னேற்றம் 27

அத்தியாயம் 04 – செயலாற்றுகை இலக்குகள் 28

அத்தியாயம் 05 – வினைத்திறன்மிக்க அபிவிருத்தி இலக்குகள் 29

அத்தியாயம் 06 – மனிதவள முகாமைத்துவம் 30

6.1 பதவியணி முகாமைத்துவம் 30
6.2 பதவியணி குறைபாடு மற்றும் மிகை 30
6.3 மனிதவள முகாமைத்துவம் 32

அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை 38

01
அத்தியாயம்

நிறுவனத்தின் தகவல்கள்

1.1 அறிமுகம்

1904 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இலங்கை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்ததாக ஒரு அலுவலருடன் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க பகுப்பாய்வாளர் நிறுவனத்தின் முதலாவது பகுப்பாய்வாளராக பிரித்தானியரான திரு. கே.சி. பிறவுனின் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்ததாக காணப்பட்ட இந்த நிறுவனம் 1913 ஆம் ஆண்டு அரசாங்க திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டது. திணைக்களமொன்றாக வளர்ச்சியடைந்து வந்த இந்த நிறுவனம் 1934 ஆம் ஆண்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் காணப்பட்ட கட்டிடமொன்றில் மீளத்தாபிக்கப்பட்டது.

ஆரம்பம் முதல் வெளிநாட்டுத் தலைவர்களின் கீழ் காணப்பட்ட இத்திணைக்களத்தின் முதலாவது இலங்கையைச் சேர்ந்த பகுப்பாய்வாளராக திரு. டபிள்யூ.ஆர். சண்முகம் 1945 ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பணிகளை விஸ்தரித்து 1935 ஆம் ஆண்டு சந்தேகத்திற்கிடமான ஆவணங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1940 ஆம் ஆண்டு முதலாவது சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் பற்றிய அரசாங்க பகுப்பாய்வாளராக திரு. தம்பையா நாகேந்திரன் நியமனம் செய்யப்பட்டார்.

1960 ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு அமைச்சின் கீழும், 1978 ஆம் ஆண்டு முதல் நீதி அமைச்சின் கீழும் இத்திணைக்களம் இயங்கிவந்துள்ளதுடன், இதன் முதலாவது பெண் பகுப்பாய்வாளராக திருமதி யோகராணி மகேசன் 1993 ஆம் ஆண்டு நியமனம் பெற்று வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

ஆய்வுகூடமொன்றுக்கு பொருத்தமற்ற கட்டிடமொன்றில் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் நூறு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பழைய கட்டிடத்தில் காணப்பட்ட அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம், 2013 ஆம் ஆண்டு பத்தரமுல்ல, பெலவத்தயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 06 மாடிகளைக் கொண்ட புதிய ஆய்வுகூடங்கள் மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதியைக் கொண்ட புதிய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது.

நவீன அம்சங்களைக் கொண்டதாக புதிய ஆய்வுகூடத்தை தாபித்தல் மற்றும் அதற்கு இசைவாக புதிய தொழில்நுட்ப முறையியல்களை அறிமுகம் செய்ய முடிந்தமை, குற்றவியல் நியாயத்தை நிறைவேற்றத் தேவையான விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வை வினைத்திறன்மிக்கவாறு நிறைவேற்றுவதற்கு பெரும் உதவியாக அமைந்தது.


மேலும், நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறைக்கு பங்களிப்பு செய்யும் போது சட்ட விஞ்ஞானப் பிரிவுக்கு அத்தியாவசியமாக காணப்பட்ட DNA தொழில்நுட்பத்தை இந்த நாட்டில் தாபிப்பதற்கு இலங்கை அரசும் USAID கருத்திட்டமும் இணைந்து DNA ஆய்வுகூடமொன்று 2013 ஆம் ஆண்டு பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் புதிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA) மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட கருத்திட்டத்தினால் 2016 ஆம் ஆண்டு திணைக்களத்தின் DNA ஆய்வுகூடத்தை மேம்படுத்துவதற்கும், இலங்கையில் முதற் தடவையாக கணினிக் குற்றவியல் விசாரணை ஆய்வுகூடமொன்றை பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் தாபித்தமையும், திணைக்களத்தினால் குற்றவியல் நியாயத்தை நிலைநாட்டுவதற்கு வழங்கும் விஞ்ஞானரீதியான சாட்சியங்களை மென்மேலும் விளைதிறன்மிக்கதாக்குவதற்கு கிடைத்த விசேடமான பங்களிப்புக்களாகக் குறிப்பிட முடியும்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளின் உயர்மட்டத் தரத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டு பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஆய்வுகூடங்களுக்கு ISO 17025 சர்வதேச தரநியமங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. 1994 ஆம் ஆண்டு ஒரு அலுவலருடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திணைக்களத்தில் இன்று இலங்கை விஞ்ஞான சேவைக்கு உரித்தான அலுவலர்கள் 121 பேர் சேவையாற்றி வருவதுடன், 21 ஆவது பகுப்பாய்வாளராக திருமதி தீபிகா செனவிரத்ன அவர்கள் நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றார். அத்துடன் 6 ஆவது சந்தேகத்துக்கிடமான ஆவணங்களை பரிசோதிப்பவராக (பதில்) திரு. ஜே.எம். ஜயசுந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் திணைக்களம் சட்ட விஞ்ஞானம் மற்றும் உணவு விஞ்ஞானம் ஆகிய பிரதான இரண்டு துறைகளின் கீழ் இயங்கிவருவதுடன், பெருமைமிக்க சேவையொன்றை இலங்கையில் நேர்மையான மற்றும் சட்டத்தை மதிக்கின்ற சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக ஆற்றிவருகின்றது.

1.2 திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்



1.3 பிரதான பணிகள்

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களமானது, சட்ட விஞ்ஞானப் பிரிவு மற்றும் உணவு விஞ்ஞானப் பிரிவு ஆகிய பிரதான இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன்,இது இலங்கையிலுள்ள ஒரே அரச தடயவியல் சட்ட ஆய்வுகூடமாகும். வெடிமருந்துகள், தீப்புலனாய்வு, எரிபடைத்துறை, போதைவஸ்து, நீர்ப்பாயவியல் மற்றும்DNA, நஞ்சியல், சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள், கணினி டிஜிட்டல் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் நானாவித வழக்குச் சான்றுப்பொருட்கள் பிரிவு ஆகிய பிரதான எட்டுப் பிரிவுகளைக் கொண்டதாக சட்ட விஞ்ஞாபனப் பிரிவு இயங்கிவருகின்றது.

இந்தத் திணைக்களம் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாகும் என்பதுடன், நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதார திணைக்களம், துறைமுக அதிகாரசபை மற்றும் வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற வழக்குத் தடயப்பொருட்கள் மற்றும் வேறு மாதிரிகளை விஞ்ஞான ரீதியாக பரிசோதனை செய்து பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்கிவருகின்றது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரச திணைக் களங்கள் மற்றும் அரச அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் சார்ந்த மாதிரிகளின் தன்மையை பரிசோதனை செய்து அறிக்கையிடுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் நீதிமன்றங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேகத்துக்கிடமான ஆவணங்களைப் பரிசோதித்து அறிக்கைகளை சமர்ப்பிப்பது சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பரிசோதனைகளுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சகல வழக்குத் தடயப்பொருட்கள் அல்லது வேறு மாதிரிகள், உணவு மற்றும் மருந்துகள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம், மதுவரிகள் கட்டளைச் சட்டம், புகையிலை மற்றும் மதுபானம் பற்றிய தேசிய அதிகாரசபை சட்டம்,ஒப்பனைப் பொருட்கள் அவுடதங்கள் மற்றும் சாதனங்கள் சட்டம், பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம், சுடுகலன் கட்டளைச் சட்டம், விசம், அபின் மற்றும் அபாயகர ஔடத சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயுத சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, சான்றுகள் கட்டளைச்சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை வழங்குதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.


மேலும், நாட்டில் இடம்பெறுகின்ற கொலைகள், வன்புணர்ச்சி, துப்பாக்கிப் பிரயோகம், தீவிபத்து, பயங்கர வீதி விபத்துக்கள் போன்ற பயங்கரமான குற்றச் செயல்கள் சம்பந்தமான குற்றவியல் இடங்களை ஆய்வு செய்வதற்கு அலுவலர்களின் நிபுணத்துவ உதவியும் பொலிஸ் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பிரபுக்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான உணவுகளைப் பரிசோதிப்பது நஞ்சியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நீதிமன்றத்தில் நிபுணத்துவ சாட்சிகள் என்ற வகையில் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பகுப்பாய்வு அறிக்கைகள் தொடர்பில் எமது திணைக்களத்திலுள்ள இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களிலும் நிபுணத்துவ சாட்சியங்களை வழங்குகின்றார்கள்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றுள்ள அலுவலர்கள் அரச அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களுக்கு விஞ்ஞான ரீதியான ஆலோசனைகளை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக உணவுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் பல்வேறு தரநியமங்களின் வகைப்படுத்தல்களை தயார் செய்வதற்கும் மேற்படி அலுவலர்கள் பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றார்கள். பாதுகாப்பு அமைச்சுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள், வெடிமருந்துகள் மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்களை கொள்வனவு செய்யும் போதும், வேறு நிறுவனங்களுக்கு உச்சதொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போதும் தொழில்நுட்பக் குழுக்களுக்கு நிபுணத்துவ உதவியைப் பெற்றுக் கொடுப்பதும் குறித்த அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும்,பொலிஸ் அலுவலர்கள், குற்றப் புலனாய்வு அலுவலர்கள், முப்படை அலுவலர்கள், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பயிலுனர் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற மருத்துவ அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அவர்களின் சட்ட விஞ்ஞான மற்றும் உணவு விஞ்ஞான அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் இத்திணைக்களத்திலுள்ள இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் விரிவுரைகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றார்கள்.

1.4 திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு



1.5 திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு

திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

சட்ட விஞ்ஞானத்துறை (தடயவியல் விஞ்ஞானம்)

இப்பிரிவின் கீழ் பின்வரும் பகுப்பாய்வு ஆய்வுகூடங்கள் காணப்படுகின்றன.

1. துப்பாக்கி மற்றும் ஏவுகணை விஞ்ஞான ஆய்வுகூடம்

துப்பாக்கி மற்றும் சட்ட ஏவுகணை விஞ்ஞான பிரிவினால் பல்வேறு வகையிலான துப்பாக்கிகள் அதாவது ரைபல், பிஸ்ரல், தோட்டா, துப்பாக்கி, இடிக்கும் துப்பாக்கி மற்றும் தோட்டா வகைகளை வைத்திருக்கும் போது,இவை குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவற்றை பரிசோதித்து அறிக்கைகள் வழங்கப்படும். துப்பாக்கிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் நுண்ணிய ஒப்பீட்டு பரிசோதனைகளை மேற்கொண்டு விஞ்ஞான ரீதியாக பரிசோதனை செய்வதும் இதில் உள்ளடங்கும். இதற்காக குற்றச் செயல்களின் போது பயன்படுத்தப்படுகின்ற துப்பாக்கிகள், துப்பாக்கிகளின் பகுதிகள், பல்வேறு தோட்டா வகைகள், பயன்படுத்திய தோட்டா உறைகள் மற்றும் தோட்டாக்கள் போன்றன பரிசோதிக்கப்படும். மேலும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உட்பட்ட வாகனம், கட்டிடம் போன்றனவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், எவ்வாறான துப்பாக்கி குறித்த குற்றவியல் செயலுக்கு பயன்படுத்தப்பட்டது என்பது பற்றிய நிபுணத்துவ கருத்து வெளியிடப்படும்.

2. வெடிமருந்துகள் மற்றும் தீப் புலனாய்வு ஆய்வுகூடம்

இப்பிரிவினால் குண்டு வெடிப்பு, வெடிமருந்துகள் மற்றும் வெடிக்கச் செய்யும் உபாயமுறைகளை (குண்டு) யாராயினும் தம்வசம் வைத்திருப்பது உட்பட வெடிமருந்துகளை பயன்படுத்தி மேற்கொள்ளும் குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குச் சான்றுப்பொருட்கள் விஞ்ஞான ரீதியாக பரிசோதிக்கப்படும். தம்வசம் வைத்திருக்கும் போது கைப்பற்றப்படுகின்ற பல்வேறு வகையிலுமான வெடிப்பு உபாயமுறைகளை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) செயலிழக்கச் செய்த பின்னர், அவற்றின் பகுதிகளும் மேற்படி அலுவலர்களினால் பகுப்பாய்வு செய்யப்படும். மேலும், ஆதனங்கள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் போன்றன தீவிபத்துக்கு உட்படும் போது பொலிஸில் முறைப்பாடு செய்தல் மற்றும் காப்புறுதி நட்டஈட்டுக்காக சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளுக்கு அமைய மேற்படி தீவிபத்துக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தீவிபத்துக்கான காரணம் தொடர்பிலான அபிப்பிராயங்களை சமர்ப்பிப்பதும் மேற்படி பிரிவைச் சேர்ந்த அலுவலர்களின் பணியில் உள்ளடங்கும்.

3. போதைவஸ்து மற்றும் உளக்கோளாறு நடத்தை பற்றிய ஆய்வுகூடம்

பொலிஸ்,பொலிஸ் போதைவஸ்துப் பணியகம் அல்லது சுங்கத்தினால் கைப்பற்றப்படுகின்ற தடை செய்யப்பட்ட போதைவஸ்துக்கள் மற்றும் உளக்கோளாறுக்குக் காரணமாகின்ற ஹெரோயின், மோபீன், அபின், கஞ்சா மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள், கோகேன், மெத்எம்பிரமீன் மற்றும் அவை சார்ந்த பல்வேறு போதை மருந்துகள் மற்றும் New Psychoactive Substances (NPS) வகையில் உள்ளடங்குகின்ற போதை மருந்துகளை இரசாயன ரீதியாக இனங்காணல் மற்றும் அவற்றில் உள்ளடங்கும் அம்சங்களின் கூறுகள் பற்றிய தூய்மைப் பகுப்பாய்வை மேற்கொண்டு நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே தேவையான சந்தர்ப்பங்களில் போதைப்பொருட்கள் தடுத்து வைக்கப்பட்ட இடங்கள், போதைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்ற இடங்கள் மற்றும் அவற்றைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் போன்றவற்றை பரிசோதிக்க பொலிஸா ருக்குத் தேவையான நிபுணத்துவ உதவிகளும் வழங்கப்படுகின்றன.

4. நீதிமன்ற நீர்ப்பாயவியல் மற்றும் மரபணு (டீ.என்.ஏ.) ஆய்வுகூடம்

பல்வேறு கடும் குற்றச் செயல்கள் தொடர்பான சாட்சியங்களாக பெற்றுக் கொள்ளப்படும் உயிரியல்சார் பதார்த்தங்கள் மற்றும் உயிரியல் ரீதியாக தாய், தந்தை மற்றும் பிள்ளைகள் ஆகிய குறித்த தரப்பினர்களுக்கு இடையிலான தொடர்பைப் பெற்றுக் கொள்வதற்காக மனித உடலின் எலும்புத் துண்டுகள், பல் மற்றும் உடல் திரவங்கள் உட்பட எந்தவொரு உயிரியல்சார் பதார்த்தத்தின் அடிப்படையில் பரிசோதனைகளை நடாத்தி மரபணு (டி.என்.ஏ.) பரிசோதனையின் அடிப்படையில் அறிக்கைகளை வெளியிடுவது இப்பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

மேலும் சிக்கலான கொலைகள் மற்றும் குற்றச் செயல்கள் இடம்பெற்ற இடங்களில் காணப்படும் இரத்தக்கறைகள், முடி, இரத்தம் தெளித்துள்ள விதம் போன்ற உயிரியல்சார் பௌதீக சான்றுகளை பரிசோதித்து, பகுப்பாய்வு செய்து அறிக்கைகளை வெளியிடுவதும் இப்பிரிவின் கடமைகளில் உள்ளடங்கும்.

இதற்கு மேலதிகமாக வாகன விபத்துக்கள் தொடர்பாக வாகனங்கள் விபத்துக்குள்ளான இடங்கள் மற்றும் குறித்த ஏனைய தடயப்பொருட்களை விஞ்ஞான ரீதியாக பரிசோதித்து மேற்படி விபத்துக்களை மீளஉருவாக்கி தேவையான முக்கிய சாட்சியங்களை கண்டுபிடிப்பது இப்பிரிவின் நிபுணர்களது பொறுப்பாகும்.

5. நீதிமன்ற நஞ்சியல் ஆய்வுகூடம்

நீதிமன்ற நஞ்சியல் பிரிவைச் சேர்ந்த நிபுணர்களினால் சட்டமருத்துவப் பணிகள் மற்றும் குற்றவியல் செயல்களின் பரிசோதனைகளுக்கு நஞ்சு வகைகளை இனங்காண்பதற்கான பல பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீதிமன்ற மருத்துவ அலுவலர்கள் அல்லது நீதிமன்றத்தினால் பொறுப்பளிக்கப்படுகின்ற சந்தேகத்துக்கிடமான மற்றும் திடீர் மரணங்களுக்கு ஆளான ஆட்களின் மரண விசாரணைகளின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட உடல் பகுதிகள் மற்றும் மாதிரிகள், போதைவஸ்துக்கள் மற்றும் ஏனைய நஞ்சு வகைகளான சயனைட், பூச்சிகொல்லி வகைகள், அரிக்கும் அமில வகைகள் மற்றும் காபன்மோனோக்சையிட்டை போன்ற பாதகமான இரசாயனப் பதார்த்தகங்களை இனங்காண்பதற்கான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல், குடிபோதையில் வாகனம் ஓட்டிச் சென்றதாக சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் உயிரிழப்பு ஏற்பட்டுள்ள வாகன விபத்துக்களின் போது மதுபானம் அல்லது வேறு மருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை இனங்காண்பதற்காக ஆட்களின் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல், குற்றவியல் செயல் இடம்பெற்றுள்ள இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட சட்ட விஞ்ஞான ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பௌதீக சான்றுகள் (மருந்து வில்லைகள், நஞ்சு போத்தல், எஞ்சியுள்ள உணவு போன்றன) போதைவஸ்துக்கள், நஞ்சு வகைகள் மற்றும் அமில வகைகளை இனங்காண்பதற்கான இரசாயன பகுப்பாய்வுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

6. சட்டவிஞ்ஞான ரீதியில் சந்தேகத்துக்கிடமான ஆவணங்களுக்கான ஆய்வுகூடம்

நீதிமன்ற மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்குத் தேவையான சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் இப்பிரிவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

சகல வகையான சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள், கையெழுத்து மற்றும் கையொப்பம் போன்றன இப்பிரிவினால் அவற்றின் உண்மைத்தன்மை பற்றி பரிசோதிக்கப்படும். மேலும் ஆவணங்களிலுள்ள மாற்றம் செய்யப்பட்டவை, அழித்தல், திரிபுபடுத்தல், புதிதாக சேர்த்தல் மற்றும் பதிலீடு செய்யப்பட்ட வற்றை இனங்காணல், கடவுச்சீட்டு, வீசா, எழுதும் உபகரணம், மை, கடதாசி மற்றும் ஒட்டும் பொருட்கள், எரிந்த கருகிப்போன மற்றும் திரிபுபடுத்தப்பட்ட நாசப்படுத்தப்பட்ட ஆவணங்கள், போலி நாணயத் தாள்கள், லொத்தர்சீட்டுக்கள், வருமான முத்திரை, தபால் முத்திரை மற்றும் (அரச) வருமானத்துடன் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்களை பரிசோதித்து அவற்றின் உண்மைத்தன்மை அல்லது உரிய வேறு அபிப்பிராயங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பது இப்பிரிவைச் சேர்ந்த நிபுணர்களான அலுவலர்களின் பொறுப்பாகும்.

7. கணினி மற்றும் டிஜிரல் குற்றச் செயல்களை பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகூடம்

அண்மைக்காலத்தில் தாபிக்கப்பட்டுள்ள டிஜிரல் குற்றச் செயல்களை பகுப்பாய்வு செய்யும் பிரிவு பிரதானமாக டிஜிரல் தரவுப் பகுப்பாய்வு, டிஜிரல் புகைப்படப் பகுப்பாய்வு, குரல் அடையாளம் மற்றும் ஒலிப் பகுப்பாய்வு மற்றும் உயிரியல் பண்புசார் பகுப்பாய்வு ஆகிய பிரதான 4 பிரிவுகளின் கீழ் பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

கணினி, கையடக்கத் தொலைபேசி, CCTV DVR இயந்திரங்கள் போன்ற டிஜிரல் உபகரணங்களில் உள்ளடங்கும் தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றில் அழிக்கப்பட்டுள்ள தரவுகளை மீள்உருவாக்கம் செய்தல், CCTV வீடியோ தரவுகளை பகுப்பாய்வு செய்தல், உயிரியல் பண்புசார் அடிப்படையில் CCTV காட்சிகளில் தோற்றும் ஆட்களின் முகங்களை இனங்காணல், CCTV காட்சிகளில் காணப்படுகின்ற தெளிவற்ற வாகனப் பதிவு இலக்கத் தகடுகளை இனங்காணல், டிஜிரல் புகைப்படம் மற்றும் வீடியோ நாடாக்களை மேம்படுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இனங்காணல், குரல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள உரையாடல்களில் உள்ள குரல்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் போன்ற பகுப்பாய்வுகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

8. நானாவித வழக்குச் சான்றுப்பொருட்களின் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

நானாவித வழக்குச் சான்றுப்பொருட்கள் பிரிவிலுள்ள சட்ட நீதிமன்ற நிபுணர்களினால் ஏனைய விடயங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்டு வகைப்படுத்தப்பட முடியாத வேறு வகையிலான பௌதீக சான்றுகள் பரிசோதிக்கப்படுகின்றன. சந்தேகத்துக்கிடமான வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் என்ஜின் இலக்கத்தை பரிசோதித்தல் மற்றும் அவை உண்மையானவையா, மோசடியானவையா என்பதை தீர்மானித்தல் மற்றும் பொருத்தப்பட்ட வாகனங்களை இனங்காண்பது இதற்கான உதாரணமாகும். மேலும் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு வகையிலுமான தொடுதல் பற்றிய சான்றுகள் மற்றும் பௌதீக சான்றுகள் உதாரணம் : கண்ணாடித் துண்டுகள், வர்ண பகுதிகள், நார் வகைகள், மண், ஆயுதம், ஆயுத அடையாளங்கள் (விரல் அடையாளம் அல்லாத) இலட்சினைகள் போன்றவற்றுக்கு விஞ்ஞான ரீதியான பரிசோதனை மற்றும் பல்வேறு தொழில்நுட்ப இரசாயன உபகரணங்களை பயன்படுத்தி இரசாயனப் பகுப்பாய்வு முறைகளின் மூலம் இனங்காணல் மற்றும் ஒப்பீடு செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

உணவு விஞ்ஞானப் பிரிவு

1. உணவுப் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

1980 இன் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் சுகாதார திணைக்களத்தின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர்களினால் (சுகாதார மருத்துவ அலுவலர்கள், உணவுப் பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் போன்றோர்) சமர்ப்பிக்கும் உணவு மாதிரிகள், பால் மற்றும் பால்சார்ந்த உற்பத்திகளை, பகுப்பாய்வு செய்துஅறிக்கைகளை வெளியிடுதல், உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால், ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் மற்றும் தனியார் நிறுவனங்களினால் அனுப்பிவைக்கப்படுகின்ற அவ்வாறான உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்து நிலைமை அறிக்கைகள் வெளியிடுதல் மற்றும் சுங்கத் திணைக்களம், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, இலங்கை தேயிலை சபை மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் போன்ற நிறுவனங்கள் சமர்ப்பிக்கின்ற மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கைகளை வெளியிடுதல், தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு குடிநீர் மற்றும் கைத்தொழில் கழிவு நீரைப் பகுப்பாய்வு செய்து நிலைமை அறிக்கைகளை வெளியிடுவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

2. மதுபானப் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

நீதிமன்றத்தினால் பகுப்பாய்வுக்காக எமது திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும் சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளை பகுப்பாய்வு செய்து மதுவரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் மதுவரிகள் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களுக்கான நிலைமை அறிக்கைகளை வெளியிடுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்குகள் பிரிவு

திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளான வினைத்திறனுடனும், நியாயமாகவும் நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யத் தேவையான வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்கத் தேவையான நிதியை சேகரித்தல் மற்றும் அவற்றை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் வழிப்படுத்துவதன் மூலம் நிதி முகாமைத்துவம் செய்தல் மற்றும் அவை சம்பந்தமான கணக்கு நடவடிக்கைகளை பேணிவருவதும், நிதித் தகவல்களை அவசியப்படும் வேறு தரப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும் நிதிப் பிரிவின் பொறுப்புமாகும்.

மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது,

- வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தல்.
- நிதி ஆலோசனை மற்றும் வழிகாட்டல்
- நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்
- அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நிதியைப் பயன்படுத்தல்.
- கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

தாபனப் பிரிவு

திணைக்களத்தில் சிறந்ததொரு பதவியணியினரை பேணிவருதல், மனிதவள முகாமைத்துவம், பயிற்றுவித்தல் மற்றும் வினைத்திறனுடனும், நியாயமாகவும், நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறைக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1.6 வெளிநாட்டு நிதியைக் கொண்ட கருத்திட்டங்களின் விபரம்

கருத்திட்டத்தின் பெயர்	கொடை வழங்கிய நாடு	கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை	கருத்திட்டக் காலப்பகுதி
• இலங்கையில் குற்றவியல் நியாயத்தை நிறை வேற்றும் கட்டமைப்பில் சட்டத்துறை மருத்துவ ஒளடத பகுப்பாய்வின் கொள்ளளவை கட்டி யெழுப்புவதை வலுவூட்டல்	கொரியா (கொய்கா கருத்திட்டம்)	4 அ.டொ.மி.	2022 - 2025

02
அத்தியாயம்

செயலாற்றுகை மற்றும் எதிர்கால சவால்கள்

பகுப்பாய்வு அறிக்கைகளின் முன்னேற்றம்

அறிக்கையிடப்பட்டுள்ள வழக்கு எண்ணிக்கை நியாயத்தை நிலைநாட்டுவதற்கு பங்களிப்புச் செய்யும் முன்னேற்றத்தின் அளவுகோளொன்றாகும். 2021 ஆம் ஆண்டில் கிடைத்த வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை 29,355 ஆகும் என்பதுடன், 2022 ஆம் ஆண்டு கிடைத்த வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை 42,895 ஆக வளர்ச்சியடைந்தது. அதற்கமைய இது 46% ஆன வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. மேலும் 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 40,756 ஆகும் என்பதுடன், இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% ஆன வளர்ச்சியாகும். (2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 36,328 ஆகும்.)

பொதுவாக நோக்கும் போது கூடுதலான வழக்குகளின் எண்ணிக்கை கிடைத்திருப்பது போதைவஸ்து மற்றும் உளவியல்சார்ந்த பிரிவிலாகும் என்பதுடன், அதற்கமைய கூடுதலான அறிக்கைகள் வெளியிடப்பட்டிருப்பதும் குறித்த பிரிவினாலாகும்.


	2021	2022
கிடைத்த வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை	13,358	20,798
அறிக்கையிடப்பட்ட வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை	17,841	16,479


2020 – 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடு முகம்கொடுத்திருந்த கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலாயினும், திணைக்களத்தின் அலுவலர்களின் முயற்சி மற்றும் அர்ப்பணிப்புக் காரணமாக வினைத்திறனும், விளைதிறனும்மிக்க சேவையை பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் அவர்களுக்கு கௌரவமும், பாராட்டும் உரித்தாதல் வேண்டும்.


பிரிவு	ஆய்வுகூடம்	2022.01.01 திகதியில் வழக்குகளின் எண்ணிக்கை	கிடைத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை	அறிக்கையிடப்பட்ட வழக்குகளின்	2022.12.31 திகதிக்கு அறிக்கையிடப்படாத வழக்குகளின் எண்ணிக்கை
சட்ட விஞ்ஞானப் பிரிவு	போதைவஸ்து மற்றும் உளக்கோளாறு நடத்தை	1,390	20,798	16,479	5,709
	துப்பாக்கி மற்றும் ஏவுகனை	221	434	441	214
	வெடிமருந்து மற்றும் தீப்பிடித்தல்	163	835	821	177
	நீதிமன்ற நஞ்சியல் (நச்சு வகைகள்)	1,383	2,610	3,102	891
	நீதிமன்ற நீர்ப்பாயவியல்	2,567	1,955	1,462	3,060
	சந்தேகத்திற்குரிய ஆவணங்கள்	80	721	697	104
	டிஜிரல் குற்றவியல்	878	883	808	953
	பல்வகை நீதிமன்ற அம்சங்கள்	365	458	598	225
மொத்தம்		7,047	28,694	24,408	11,333
உணவு விஞ்ஞானப் பிரிவு	மதுபானம்	392	7,295	7,091	596
	மதுசாரம் மற்றும் புகையிலை	192	2,953	3,063	82
	உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள்	21	5,327	5,177	171
	பல்வேறு உணவு வகைகள்	48	976	1,017	7
மொத்தம்		653	16,551	16,348	856
முழு மொத்தம்		7,700	45,245	40,756	12,189


பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

பணி	எண்ணிக்கை
நீதிமன்றங்களில் சாட்சியமளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்	317 நாள்
குற்றச்செயல்கள் இடம்பெற்ற இடங்களில் பங்கேற்ற சந்தர்ப்பங்கள்	535 நாள்
நஞ்சியல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்ற விசேட பிரபுக்கள் மற்றும் இராஜதந்திரிகளின் உணவுப் பரிசோதனை	09 அலுவலர் நாள்
விரிவுரைகளை நடாத்தல்	44 நாள்
உள்நாட்டு பயிற்சி	1099 அலுவலர் நாள்
வெளிநாட்டுப் பயிற்சி	12 அலுவலர் நாள்









1. பகுப்பாய்வை நிறைவு செய்துகொள்ள முடியாது போன வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை யைக் குறைத்தல்

அறிக்கையிடுவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வழக்குத் தடயப்பொருட்கள் பற்றிய அறிக்கைகளை தாமதமின்றி சமர்ப்பிப்பது மிகவும் முக்கியமானதாகும். இதற்கு திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படுகின்ற இலங்கை விஞ்ஞான சேவையின் வெற்றிடங்களை நிரப்புவது அத்தியாவசியமாகும். தற்போது உதவிப் பகுப்பாய்வு அலுவலர்கள் 19 பேரின் பதவிகள் வெற்றிடமாகியுள்ளதுடன், விசேட அங்கீகாரத்தின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டு எழுந்த எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அலுவலகத்திற்கு அலுவலர்களை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பகுப்பாய்வை நிறைவு செய்ய முடியாது போன வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் வழக்குள் கிடைப்பது 46% இனால் அதிகரித்துள்ளமையும் பகுப்பாய்வுகளை நிறைவு செய்ய முடியாது போன வழக்குத் தடயப்பொருட்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாகியுள்ளது.

நாளாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற வழக்குத் தடயப்பொருட்கள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பகுப்பாய்வை நிறைவு செய்ய முடியாது போன வழக்குகள் தொடர்பான நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக அலுவலர்களை மேலதிக நேர அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவது அவசியமாகும் என்பதுடன், வாராந்த நாட்களில் மேலதிமாக சில மணி நேரம் சேவையாற்றல் மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் சேவையாற்ற வேண்டி ஏற்பட்டது.

2. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவை தாபித்தல்

நவீன விஞ்ஞான முறையியல்கள் பற்றிய அறிவு திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு மிக முக்கியமான தாகும். புதிய போதைவஸ்துக்கள் மற்றும் இரசாயனங்களைப் பயன்படுத்துவது நாளாந்தம் ஏற்பட்டு வருவதுடன் திணைக்கள அலுவலர்கள் இந்த நிலைமைகள் பற்றி போதியளவில் கற்றுக் கொண்டிருப்பது அவசியமாகின்றது. இதற்கான இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சி மற்றும் பட்டப்பின் படிப்பு வரையான கற்கை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

3. நீதிமன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளை அகற்றுதல்

நாட்டில் இயங்கிவருகின்ற நீதிமன்ற முறையில் ஒரு வழக்கின் இறுதித் தீர்ப்பு கிடைப்பது தாமதமடைவதன் காரணமாக விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட வழக்குத் தடயப் பொருட்களை அகற்றுவது தாமதமடை கின்றது. வழக்குத் தடயப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படுகின்ற இடவசதிகள் கூடுதலாக சமர்ப்பிக்கப்படு கின்ற வழக்குத் தடயப்பொருட்களை களஞ்சியப்படுத்த போதியதாக இல்லாமை பாரியதொரு சிக்கலாகும். இதன் காரணமாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குத் தடயப்பொருட்களை திணைக்கள வளவிலிருந்து காலத்திற்கு ஏற்ப அகற்றுவதற்கான முறையியலை தயார் செய்தல் வேண்டும். எனவே கௌரவ நீதி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரின் தலைமையில் போதைவஸ்து அபாயகரமான ஔடதங்களை அகற்றும் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருப்பதுடன், அரசாங்க பகுப்பாய்வாளரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றார். தற்போது பொலிஸ் அலுவலர்கள் நீதிமன்ற உத்தரவுடன் தடயப் பொருட்களை அகற்றுவதை மேற்கொண்டு வருகின்றார்கள்.

4. வீடியோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிபுணர்களின் சாட்சியங்களை வழங்குதல்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள நீதிமன்றங்களில் சாட்சியமளிப்பதற்கு அலுவலர்களை பங்கேற்கச் செய்வதில் எழும் சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக ஒன்லையின் வீடியோ தொழில்நுட்பம் மூலம் துரிதமாக சாட்சியமளிக்கும் முறையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமான விடயமாகும். தன் ஆரம்ப கட்டமாக வீடியோ தொழில்நுட்ப உபகரணத் தொகுதிகள் இரண்டு நீதி அமைச்சர் மற்றும் யுஎன்டிபி கருத்திட்டத்தின் கீழ் எமது திணைக்களத்திற்கு பெற்றுத் தரப்பட்டதுடன், அவை தற்போது திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தற்போது தொலைச்சாட்சியமளித்தல் பற்றிய தெளிவான சட்ட ஏற்பாடுகள் இதுவரை இல்லை என்பதனால், அதற்குரிய நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் இணைந்து தேவையான சட்ட ஏற்பாடுகள் மற்றும் சட்டங்களை துரிதமாக தாபித்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றேன்.





வீடியோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிபுணர்களின் சாட்சிகளை வழங்குவது தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்த முறையின் கீழ் திணைக்களத்திலுள்ள இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் நாடு முழுவதிலும் பரந்துள்ள பல்வேறு நீதிமன்றங்களுக்கும் தமது நிபுணத்துவ சாட்சியங்களை வழங்க முடியும் என்பதனால், பௌதீக ரீதியாக பங்கேற்பதற்கு எடுக்கும் காலம் பாரியளவில் சேமிக்கப்படுவதன் காரணமாக நேரத்தை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு கடமை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியு மாதல் மற்றும் அரசாங்க செலவினங்களையும் ஒப்பீட்டு ரீதியில் குறைத்துக் கொள்ள முடியும் என்பதும் தெரியவருகின்றது.

5. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளல்

நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற வழக்குத் தடயப் பொருட்கள் கிடைப்பதை முகாமைத்துவம் செய்து கொள்ளக்கூடியவாறு தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் விளைதிறனை வளர்த்துக் கொள்வதில் இது தாக்கம் செலுத்தும். இக்டா நிறுவனத்தினால் இரண்டு கட்டங் களைக் கொண்ட கருத்திட்டமாக இந்த நடவடிக்கைகள் மென்பொருட்களைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், முதற் கட்டம் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு சில நடைமுறைச் சிக்கல்களை தீர்த்துக் கொள்ள முடியாது போனதன் காரணமாக மேற்படி மென்பொருளை 2022 ஆம் ஆண்டில் தாபிக்க முடியவில்லை.

6. ஆய்வுக்கூடங்களின் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்கு கணினி மென்பொருளைத் தாபித்தல்


சமர்ப்பிக்கப்படுகின்ற மாதிரிகள் மற்றும் ஆய்வுகூடங்களின் தகவல்களை விளைதிறன்மிக்கவாறு வழிப்படுத்தக் கூடிய முறையியல் ஒன்றை தாபிப்பது இதன் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

7. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிதி மற்றும் வெளிநாட்டு நிதி ஏற்பாடுகளின் மூலம் திணைக்களத்தின் பல்வேறு ஆய்வுகூடங்களுக்குக் கிடைத்துள்ள உபகரணங்களின் புகைப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

துப்பாக்கி மற்றும் ஏவுகனை விஞ்ஞானப் பிரிவு








Gas Chromatography – Mass Spectrometry

UNODC கருத்திட்டத்தின் கீழ் Gas Chromatography – Mass Spectrometry உபகரணம் வெடிமருந்து பற்றிய பிரிவின் ஆய்வுகூடத்திற்குக் கிடைத்துள்ளது. ஒரு வெடிப்புச் சம்பவனத்தின் போது கிடைக்கின்ற வெடித்துச் சிதறிய எச்சங்களில் உள்ளடங்கும் வெடி மருந்து வகைகளை இனங்காண்பதற்கு மற்றும் வெடித்துச் சிதறிய அம்சங்களின் மாதிரிகளின் தீப்பிடிக்கக்கூடிய சேதமடைந்த அம்சங்களின் எச்சங்களில் உள்ளடக்கத்தை பரிசோதிக்க இந்த உபகரணம் பயன்படுத்தப்படும்.


போதைவஸ்து மற்றும் உளக்கோளாறுசார் நடத்தைப் பிரிவு

	**Raman Spectroscopy** ஐக்கிய நாடுகளின் போதைவஸ்து மற்றும் குற்றவியல் பற்றிய அலுவலகம் (UNODC) போதைவஸ்துக்களை இனங்காணல் போதை வஸ்துக்களில் உள்ளடங்கும் கலவைகளை இனங்காணல்.
	**Gas Chromatography Mass Spectrometry** **GC-MS 04** யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (JAICA) போதைவஸ்து வகையை குறிப்பாக இனங்காணல், அளவைசார் பகுப்பாய்வு
	**Gas Chromatography Mass Spectrometry** **GC-MS 05** யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (JAICA) போதைவஸ்து வகையை குறிப்பாக இனங்காணல், அளவைசார் பகுப்பாய்வு

நீதிமன்ற நஞ்சியல் (நச்சு வகைகள்)

	GCMS- SHIMADZU யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (JAICA) பொலிஸாரினால் கையளிக்கப்பட்டது. மருந்துகள் மற்றும் கிருமி நாசினிகள் பற்றிய பகுப்பாய்வு
	UHPLC- SHIMADZU யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (JAICA) பொலிஸாரினால் கையளிக்கப்பட்டது. மருந்துகள் மற்றும் கிருமி நாசினிகள் பற்றிய பகுப்பாய்வு
	UV Spectrometer மருந்துகள் பற்றிய பகுப்பாய்வு (மருந்து வில்லைகளுக்கு விசேடமானதாகும்.) உலோக வகைகளின் பகுப்பாய்வுக்கு colonmetric பயன்படுத்தப்படுகின்றது.


உணவுப் பிரிவு

	FAO Project கருத்திட்டத்தினால் வழங்கப்பட்ட உபகரணமாகும். பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான உணவு மாதிரிகள் (மரபணு மாற்றம் செய்யப்பட்ட) தயார் செய்துகொள்ள வழங்கப்பட்டுள்ளது. தற்போது வேறு பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்குரிய உணவு மாதிரிகளை தயார் செய்து கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றது.
	FAO Project கருத்திட்டத்தினால் வழங்கப்பட்ட உபகரணமாகும். பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்கு மாதிரிகளை தயார் செய்து கொள்ளத் தேவையான உணவு மாதிரிகளின் பகுதிகளுக்கான நிறையை அளவிடப் பயன்படுத்தப்படுகின்றது.
	மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு மாதிரிகளின் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட உபகரணமாகும். தற்போது இதன் மூலம் மீனில் உள்ள போமல்டிஹையிட் அளவை நிர்ணயித்துக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றது.

நீதிமன்ற நீர்ப்பாயவியல் பிரிவு

 	2-8 ̊c Refrigerator (Brand Name -LABFREEZE) For storage samples
	டி.என்.ஏ. பரிசோதனை நடவடிக்கைகளுக்கு பல்வேறு நீதிமன்றங்கள் மற்றும் நீதிமன்ற மருத்துவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பல்வேறு உயிரியல்சார் பொருட்கள் உள்ளடங்குகின்ற வழக்குத் தடயப்பொருட்கள் மற்றும் மாதிரிகளில் அவற்றின் பரிசோதனைகளை ஆரம்பிக்கும் வரை ஈரத் தன்மையுடன் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். இதற்காக 2-8 ̊c வரை குறைவான வெப்பநிலை மட்டத்தில் மாதிரிகள் மற்றும் வழக்குத் தடயப் பொருட்களை களஞ்சியப்படுத்த வேண்டும் என்பதுடன், இந்த குளிரூட்டி அதற்கு மிகவும் பயனுள்ளதாகும். Rs. 2,144,175/-
	Photo Copy Machine (Multi-functional -Photo copy, Printing, Scan) (Brand-TOSHIBA)
	பல்தேவை உபகரணமொன்றாகும் என்பதுடன் வழக்குத் தடயப்பொருட்களை பரிசோதிக்கும் நடவடிக்கைகளின் பொது உரிய புகைப்படப் பிரதிகளை பெற்றுக் கொள்ளல் scan செய்யும் நடவடிக்கைகளுக்கும் வழக்குத் தடயப் பொருட்களை பரிசோதித்த பின்னர் தயார் செய்யப்படுகின்ற அறிக்கையை அச்சிடுவதற்கும் இந்த இயந்திரம் பயன் படுத்தப்படுகின்றது. பல்தேவை உபகணரமொன்றாக உள்ளதனால் ஆய்வுகூட நடவடிக்கைகளுக்கு பெருமளவு உதவியாக அமைந்துள்ளது. Rs. 97,200/-

மதுபானப் பிரிவு

	Analytical Balance Model No – AS 220R2 S/N 735446 Manufacturer – RADWG, Poland Local Agent – Analytical Instruments, Colombo 08. மாதிரிகளை நிறையை அளவிடுதல் 2022.01.18 ஆம் திகதி இலங்கை நிதியில் ரூபா 31,101,200.01 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டது.
	Alcolzyer System (Anton Paar) -02 Model No – DMA 4500M S/N 83660115 Manufacturer - Anton Paar, GMbH, Austria Local Agent – Analytical Instruments, Colombo 08. காய்ச்சப்பட்ட மற்றும் புளிக்க வைக்கப்பட்ட மதுபானங்களின் மதுசார செறிவை அளவிடுதல். 2022.08.25 ஆம் திகதி இலங்கை நிதியில் ரூபா 210,700.00 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டு திணைக்களத்திற்கு பகுப்பாய்வு செய்வதற்காக கிடைத்த வழக்குத் தடயப் பொருட்கள் சம்பந்தமான விசேட சம்பவங்கள்

வெடிமருந்து மற்றும் தீப்பிடித்தல் பிரிவு

1. 2022.01.09 ஆம் திகதி நுவரெலியா பொலிஸ் பிரிவில் ஒரு ஹோட்டல் அறையில் குளியறைக்குள் இடம்பெற்ற வெப்பநீர் தாங்கியில் (Hot Water Geyser) இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணை

2. 2022.04.19 ஆம் திகதி எரிபொருள் விலை ஏற்றம் காரணமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொது மக்களினால் ரம்புக்கனை பொலிஸ் பிரிவில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகே எரிபொருள் ஏற்றிச் சென்ற பவுசர் ஒன்றுக்கு தீவைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பான விசாரணை

3. 2022.05.09 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற மக்களின் எதிர்ப்புக்கள் தொடர்பாக நாடு முழுவதிலும் தீ வைக்கப்பட்ட வீடுகள், அலுவலகங்கள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் பற்றிய 180 வழக்குகள் தொடர்பான விஞ்ஞான ரீதியில் தீ பற்றிய விசாரணை

4. 2022.07.08 ஆம் திகதி கொழும்பு 15, சீ.ஜி.வி. எந்தனீ என்ட் சன்ஸ் தனியார் கம்பனிக்கு உரித்தான கட்டிடமொன்றில் குறைவான சக்தியைக் கொண்ட வெடிமருந்துகளைக் கொண்ட பொதிகளை அகற்றாமை காரணமாக அங்கு சேவையாற்றி வந்த ஆட்கள் இரண்டு பேர் திடீரென ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் காரணமாக உயிரிழந்தமை பற்றிய விசாரணை

5. 2022.07.09 ஆம் திகதி கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வீட்டுக்கு தீவைத்தமை பற்றிய விசாரணை

6. 2022.09.08 ஆம் திகதி கொழும்பு 14, பெர்கியுசன் வீதி, கஜிமா தோட்டம் எனும் முகவரியில் இடம்பெற்ற 60 மேற்பட்ட குடிசைகள் தீப்பற்றி சேதம் ஏற்பட்டமை பற்றிய விசாரணை

7. 2022.11.04 ஆம் திகதி பாணந்துறை நல்லருவ நோயல் ஆரம்ப கல்லூரி மாணவர்கள் 44 வித்தியா லயத்திற்கு அருகே வீடொன்றில் இடம்பெற்ற தீவைத்தமை காரணமாக வெளியான புகையை சுவாசித்ததன் காரணமாக ஏற்பட்ட சுவாசிக்கும் அசௌகரியங்களினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை விசாரணை

8. 2022.11.10 ஆம் திகதி புதுக்கடை நீதவானின் உத்தரவின் பேரில் ஹொரணை, கல்கடே சந்தி, குங்கமுவ கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் மூன்று பேருக்கு பொலிஸ் அலுவலர்கள் மின்சாரம் ஏற்றச் செய்து காயப்படுத்தியமை பற்றிய விசாரணை.

போதைப்பொருள் பிரிவு

2022 ஆம் ஆண்டில் போதைப்பொருள் ஆய்வுகூடத்திற்கு பல்வேறு போதைப்பொருட்கள் தொடர்பிலான 20,777 வழக்குத் தடயப்பொருட்கள் கிடைத்துள்ளதுடன்,இவற்றில் கூடுதலானவை ஹெரோயின், கஞ்சா மற்றும் மெத்எம்பிடமீன் சம்பந்தமான வழக்குத் தடயப்பொருட்களாகும். இலங்கையில் கைப்பற்றப்பட்ட மிகப் பாரிய நிறையைக் கொண்ட (100 கிலோ கிராம் - 400 கிலோ கிராம் இடைப்பட்ட) ஹெரோயின் கைப்பற்றப்பட்ட வழக்குத் தடயப்பொருட்கள் 05, மெத்எம்பிடமீன் கைப்பற்றப்பட்ட வழக்குத் தடயப்பொருட்கள் 01 மற்றும் கொகேன் கைப்பற்றப்பட்ட வழக்குத் தடயப்பொருட்கள் 01 என்பன 2022 ஆம் ஆண்டில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இலங்கையில், புதிய போக்காக மாறிவருகின்ற, புதிய உளவியல்சார் பதார்த்தங்களாகக் (New psychoactive substance (NPS)) கொள்ளப்படுகின்ற NBOH வகை, கெதின் எனும் போதைப்பொருளும், எம்பிடமீன் மற்றும் மெதலீன் டைஒக்சி மெத்எம்பிடமீன் (MDMA) உள்ளடங்கும் போதை வில்லைகளும், லைசஜிரீக் எசிட் டைஎதில்எமயிட் (LSD) உள்ளடங்கும் போதை முத்திரையும், 2022 ஆம் ஆண்டில் போதைப்பொருள் ஆய்வு கூடத்தில் இனங்காணப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

துப்பாக்கி மற்றும் ஏவுகனை விஞ்ஞானப் பிரிவு

1. 2022.04.19 ஆம் திகதி ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக வெளிக்களப் பரிசோதனை மற்றும் வழக்குத் தடயப்பொருட்கள் பகுப்பாய்வு மற்றும் அறிக்கைகளை வெளியிடல்.

2. 2022.09.08 ஆம் திகதி நிட்டம்புவை நகரில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக வெளிக்களப் பரிசோதனைகளை நடாத்தல் மற்றும் மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான வழக்குத் தடயப் பொருட்கள் பகுப்பாய்வு மற்றும் அறிக்கைகளை வெளியிடல்.

3. 2022.08.29 ஆம் திகதி கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகைக்கு முன்புறமாக இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான வெளிக்களப் பரிசோதனை மற்றும் அறிக்கைகளை வெளியிடல்.

4. தங்ஓவிட்ட பிரதேசத்தில் இ.போ.ச. பஸ் வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான வெளிக்களப் பரிசோதனை, வழக்குத் தடயப்பொருட்கள் பகுப்பாய்வு மற்றும் அறிக்கைகளை வெளியிடல்.

5. மிரிஹான சனாதிபதியின் சொந்த வீட்டுக்கு அருகே குற்றச்செயல்சார் வெளிக்களப் பரிசோதனை.

நீதிமன்ற நானாவித வழக்குத் தடயப்பொருட்கள் பகுப்பாய்வுப் பிரிவு

2022 ஆம் ஆண்டு CM பிரிவினால் குற்றவியல் இடங்களின் பரிசோதனை சம்பந்தமாக பொது மக்கள் மத்தியில் கடும் கவனம் செலுத்தப்பட்ட பின்வரும் குற்றவியல் இடங்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான பரிசோதனைகளில் பங்கேற்றமை.

- 2022 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெற்ற போராட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்ட இடங்கள்
  1. சனாதிபதி மாளிகை
  2. சனாதிபதி அலுவலகம்
  3. பிரதம அமைச்சரின் அலுவலகம்
  4. அலரி மாளிகை
  5. எவன்ரா காடன்ஸ் ஹோட்டல் வளவு (தீப்பிடித்த வாகனங்கள் பற்றிய அடையாளப் பரிசோதனை)
  6. நாட்டின் ஏனைய இடங்களில் தீப்பிடித்த வாகனங்கள் பற்றிய அடையாளப் பரிசோதனை
  7. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகொரள அவர்களின் கொலையுடன் சம்பந்தப்பட்ட வாகனம் மற்றும் உரிய ஏனைய வழக்குத் தடயப்பொருட்கள் (போராட்டம் சம்பந்தமாக சுமார் 150 வாகனங்களை பரிசோதித்தமை)

- ருவன்வெலி மகாஸேயவில் பதிக்கப்பட்டுள்ள சூடாமாணிக்கம் பற்றிய விஞ்ஞான ரீதியான பரிசோதனை நடவடிக்கைகள்

- 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற திரு தினேஷ் சாவ்டரின் மரணம் மற்றும் சம்பந்தப்பட்ட இடம்சார் பரிசோதனைகள் மற்றும் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு அறிக்கைகளை வெளியிட்டு வைத்தமை.

சந்தேகத்துக்குரிய ஆவணங்கள் பிரிவு மற்றும் டிஜிரல் மற்றும் கணினிக் குற்றச் செயல்கள் பகுப்பாய்வுப் பிரிவு

2022 ஆம் ஆண்டு சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் பிரிவுக்கு மற்றும் டிஜிரல் மற்றும் கணினிக் குற்றச் செயல்கள் பிரிவுக்குக் கிடைத்த வழக்குத் தடயப்பொருட்களில் மிகவும் முக்கியமான மற்றும் பொது மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்ட 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் 2022.07.09 ஆம் திகதிய போராட்ட சம்பவம் உட்பட பின்வரும் சம்பவங்கள் தொடர்பான வழக்குத் தடயப்பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- உயிர்த்த ஞாயிறு தொடர்பாக பயங்கரவாதிகளை இனங்காணல், குறித்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களை இனங்காண்பது பற்றிய சுமார் 120 அறிக்கைகள் வெளியிடப்பட்டன.
- பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை சம்பந்தமான ஆவணங்களை பரிசோதித்து முக்கியமான விஞ்ஞான ரீதியான சாட்சியங்களைக் கொண்ட அறிக்கை வெளியிடப்பட்டது.
- வரலாற்று முக்கியத்துவம்மிக்க ரம்புக்கனை கொட்டவெஹெர ரஜமகா விஹாரையின் மிகவும் பெறுமதிவாய்ந்த புனித தாதுக்கள் திருடப்பட்டமை தொடர்பில் முக்கியமான விஞ்ஞான ரீதியான சாட்சியங்களை கொண்ட அறிக்கை வெளியிடப்பட்டதுடன் அதன் மூலம் குறித்த குற்றவாளிகளை கைதுசெய்ய முடிந்தது.
- 2022 போராட்ட சம்பவம் தொடர்பாக தீவைத்தல், தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளல் போன்ற குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட வழக்குத் தடயப்பொருட்கள் பல சமர்ப்பிக்கப் பட்டதுடன், அவை பற்றிய சுமார் 100 பரிசோதனை அறிக்கைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகொரள அவர்களின் படுகொலை, ரம்புக்கனை துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் போன்ற வழக்குகள் சம்பந்தமான அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஊடகங்களின் மூலம் செய்தி வெளிவந்ததை அடுத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கதிர்காமம் தேவாலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட மிகப் பெறுமதிவாய்ந்த தங்கத் தட்டு காணாமற் போனமை பற்றிய முக்கியமான விஞ்ஞான ரீதியான சாட்சியங்களைக் கொண்ட நிபுணர் அறிக்கை 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
- மேலும், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் சட்டவிரோதமாக பிரவேசித்து தரவுகளை மாற்றம் செய்தமை, திருடியமை மற்றும் அக்ரஹார நிதியம் மற்றும் தொழில் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதியங்களுக்கு போலித் தரவுகளை உட்புகுத்தல் மற்றும் மோட்டார் வாகனப் போக்கு வரத்துத் திணைக்களத்தின் கணினி வலையமைப்புக்கு தரவுகளை உட்புகுத்தியமை பற்றிய நீதிமன்ற விஞ்ஞான ரீதியான சாட்சியங்களைக் கொண்ட அறிக்கை இந்த ஆண்டில் வெளியிடப்பட்டது.

நீதிமன்ற நீர்ப்பாயவியல் மற்றும் டி.என்.ஏ.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சாய்ந்தமருது தொடர் குண்டு வெடிப்பு இடத்தில் ஆட்களை இனங்காண்பதற்காக மூன்றாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அறிக்கை வெளியிடப் பட்டமை.

உணவுப் பிரிவு

தானியம் மற்றும் தானியம் சார்ந்த உணவுகளில் உள்ளடங்கும் எப்லரொக்சின் அளவுப் பகுப்பாய்வு

எப்லரொக்சின் என்பது ஒரு வகை பூஞ்சை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற நஞ்சு வகையாகும் என்பதுடன், முக்கிய புற்றுநோய்க் காரணியாகவும் கருதப்படுகின்றது. எப்லரொக்சின் பீ1, பீ2, ஜி1, ஜி2 என்ற வகையில் நான்கு வகைகள் காணப்படுவதுடன் அவற்றில் நஞ்சு அதிகம் காணப்படுகின்ற மிகவும் பாதகமான பெறுபேறுகளை ஏற்படுத்துவது எப்லரொக்சின் பீ1 வகையின் மூலமாகும்.

இலங்கையில் தானிய உணவுகளை தயார் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும் மூலப்பொருட்களில் சோளம் (Yellow Maize, Corn) முக்கியமானதாகும். உள்நாட்டு உற்பத்தி போதியதாக இல்லாமை காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட சோளமும் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த தானிய உற்பத்திகள் குழந்தைகளுக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கு பெற்றுக் கொடுக்கப்படுவதன் காரணமாக அவற்றில் உள்ள எப்லரொப்சின் அளவை பரிசோதிப்பது அத்தியாவசியமானதாகும்.

2022 ஆம் ஆண்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சோளம் மாதிரிகளில் அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தின் உணவுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளை பகுப்பாய்வு செய்த போது கிடைத்த பெறுபேறுகளுக்கு அமைய 2022 சனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை கிடைத்துள்ள 134 மாதிரிகளில் மொத்த எப்லொரொக்சின் அளவாக (பீ1+பீ2+ஜி1+ஜி2) காணப்படக்கூடிய உச்சளவான பெறுமதியான 30ppb இனை விஞ்சியிருந்த மாதிரிகளின் அளவு 48% ஆகும். 2022 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கிடைத்த மாதிரிகள் 24 இல் 30ppb விஞ்சியிருந்தது சுமார் 12% ஆன மாதிரிகள் மாத்திரமாகும். (தற்போது அமுலில் உள்ள 1993 இன் லேபல் மற்றும் பல்வேறு உணவுத் தரநியமங்கள் ஒழுங்குவிதிகள் 11 பிரிவின் கீழ் பொதுவான தடை மற்றும் விற்பனைக்கு அமைய). அதற்கமைய பகுப்பாய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் மேற்கொள்வதன் பெறுபேறாக இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் தரம் உயர்வடைந்து செல்லும் போக்கை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

2022 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரை எப்லரொக்சின் பரிசோதனைக்கு தானியங்கள் சார்ந்த உற்பத்திகளாக (Cereals and Cereal Based Products) சமர்ப்பிக்கப்பட்ட 180 மாதிரிகளில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்குக் காணப்படக்கூடியதாக உள்ள மொத்த எல்பரொக்சின் அளவு (பீ1+பீ2+ஜி1+ஜி2) காணப்படக்கூடிய உச்சளவான பெறுமதியான 04ppb இனை விஞ்சியிருந்த மாதிரிகளின் அளவு சுமார் 60% ஆகும். மேற்படி மாதிரிகளில் 73% எல்பரொக்சின் பீ1 இற்கான உச்சப் பெறுமதியான 02ppb ஐ விஞ்சியிருந்தன. மேற்படி விகிதாசாரப் பெறுமதிகளை கணிப்பீடு செய்யும் போது தானியங்கள் சார்ந்த உற்பத்திகளுக்கான இலங்கை தரநியம ஒழுங்குவிதி 1036 : 2020 (Specialication for Processed Cereal – Based foods for infants and young children) இன் உச்சளவான பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையிடப்பட்டது. எனினும் தற்போது தத்துமுள்ளதாகக் காணப்படுகின்ற உணவு மற்றும் தரநியமங்கள் ஒழுங்குவிதிகளுக்கு (1993) அமைய 1 வருடம் முதல் 3 வருடம் வரையான குழந்தைகளுக்குரிய எந்தவொரு உணவிலும் காணப்பட முடியுமான மொத்த எல்பரொக்சின் பெறுமதி 01ppbஐ விஞ்சலாகாது. மேலும் அதன் கீழ் எந்தவொரு வயதுத் தொகுதிக்கும் உணவில் காணப்பட முடியுமான மொத்த எல்பரொக்சின் அளவு 30ppbஐ விஞ்சலாகாது. அதற்கமைய பகுப்பாய்வு செய்யப்பட்ட மொத்த தானியங்கள் சார்ந்த உணவு மாதிரிகளில் 04% மேற்படி பெறுமானம் விஞ்சியிருந்தது.

தானியம் மற்றும் தானியம் சார்ந்த உற்பத்திகள் தவிர இறக்குமதி செய்யப்பட்ட உலர் மிளகாய்களின் ஏனைய மிளகாய் மாதிரிகளிலும் தேங்காய் எண்ணெய், மிளகு, கச்சான் போன்ற உணவுகளிலும் எல்பரொக்சின் அளவைக் கண்டறிவதற்கான பகுப்பாய்வு நடவடிக்கைகள் உணவுப் பிரிவினால் மேற்கொள்ளப் படுகின்றன.

தீபிகா செனவிரத்ன,
அரசாங்க பகுப்பாய்வாளர்.

03
அத்தியாயம்

ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2022.12.31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

பாதீட்டு 2022 ரூபா		குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா	
